# வேதாகமவியல் (பாடம் - 3)

## அதிகாரங்களும், வசனங்களும்

வேதத்தில் உள்ள ஐந்து புத்தகங்களைத் தவிர, மற்றபுத்தகங்கள் அதிகாரங்களாகவும், பல்வேறு வசனங்கள் கொண்டதாகவும் பிரிக்கப்பட்டுள்ளது. அந்த ஐந்து புத்தகங்கள் முறையே ஒபதியா, பிலேமோன், 2 யோவான், 3 யோவான் மற்றும் யூதா ஆகும். இந்த புத்தகங்கள் மிகவும் சிறியவையாக காணப்பட்டு, வசனங்கள் மட்டுமே பிரிக்கப்பட்டு தனித்தனி புத்தகங்களாக வேதாகமத்தில் இணைக்கப்பட்டுள்ளது.

வேத வசனங்களை, பிரிவுகளாகப் பிரித்து அதிகாரங்களாக **கார்டினல் ஹுகோ டி எஸ். காரோ** என்பவர் கி.பி.1238 ம் ஆண்டு அறிமுகப்படுத்தினார். மேலும், வேத வசனங்களை தனித்தனி வசனங்களாக **ராபர்டஸ் ஸ்டீபன்ஸ்** என்பவர் 1551-ம் ஆண்டு பிரித்து அதிகாரங்களுக்குள் உள்ளடக்கினார். அதுவரையிலும் வசனங்கள் பிரிக்கப்படவில்லை.

**வேதாகம மொழிகள்: எபிரெயம், அராமிக், கிரேக்கம்**

4000 ஆண்டுகளுக்கு முன்பதாகவே உள்ள மிகவும் தொன்மையான புத்தகம் வேதாகமம்.

கீழே உள்ள கேள்விகளுக்கு பதில்கள் இப்புத்தகத்தில் உள்ளது.

1. நான் எங்கிருந்து வந்தேன்? 2. நான் ஏன் இங்கிருக்கிறேன்? 3. நான் எங்கே போகிறேன்?

**வேதாகமத்தின் மையக் கருத்து**: மானிட வர்க்கத்தை மீட்கும்படியான தேவனுடைய அன்பான திட்டம்.

வேதாகமவியலை வரையறுத்தல்:

பைப்ளோஸ் + லோகோஸ் = பைபிளியோலாஜி

புத்தகம் + வார்த்தை = வேத வசனங்களைப் படித்தல்

வேதாகமம், நாம் புரிந்துகொள்வதற்காக, முக்கியமான ஆறு பகுதிகளாக பிரிக்கப்படுகிறது. அவைகள், வெளிப்படுத்தல், தேவ ஆவியினால் ஏவப்படுதல், பிழையற்றது, அதிகாரம், ஒளியூட்டல் மற்றும் வேத புத்தகத்தை அளவிடும் அளவுகோல்கள் போன்றவையாகும்.

## வேத வசனங்களின் வெளிப்பாடுகள் *(The Revelation of Scripture)*

தேவன் முடிவில்லாதவராகவும், மனிதன் முடிவு உடையவனாகவும் இருப்பதினால், தேவன் வெளிப்படுத்த தெரிந்துகொண்டாலொழிய, மனிதன் தேவனைப் பற்றிய சத்தியத்தை அறிந்துகொள்ள முடியாது. எனவே வெளிப்பாடு என்பது தேவன் வெளிப்படுத்துகிற தேவனுடைய சத்தியமாகவும், சத்தியத்தின் வெளிப்பாடாகவும் இருக்கிறது. ஆகவே, இந்தச் செயலானது விளக்குகிறதாகவும், வெளிப்படுத்தப்பட்ட உள்ளடக்கமாகவும் இருக்கிறது.

வெளிப்பாடு என்பது தெய்வீக அறிவை மனிதனுக்கு தேவன் அறிவிக்கிற ஒரு செயலாகும் (யாத்திராகமம் 29:29).

தேவன் தம்மை இரண்டு விதங்களில் தன்னை வெளிப்படுத்தியிருக்கிறார்.

**பொதுவான வெளிப்பாடுகள்:** கட்டளை அல்லது வரிசை, இயற்கை மற்றும் படைப்புகளின் அதிசயங்களெல்லாம், அதிகாரம் நிறைந்த மகிமையான சிருஷ்டிகர் ஆதியிலே இருந்ததை நமக்கு சொல்கிறது.

**சிறப்பு வெளிப்பாடுகள்:** சிறப்பு வெளிப்பாடுகள் என்பது தேவன் தம்மை எப்படி அதிசயமான முறையில் வெளிப்படுத்துவதற்கு தெரிந்துகொள்கிறார் என்பதாகும். அப்படிப்பட்ட சிறப்பான வெளிப்பாடுகள் முறையே தேவன் சரீரப்பிரகாரமாக காட்சியளித்தல், கனவுகள், தரிசனங்கள், எழுதப்பட்ட தேவனுடைய வார்த்தைகள் மற்றும் மிக முக்கியமாக இயேசு கிறிஸ்து போன்றவையாகும்.

# தேவ ஆவியினால் ஏவப்படுதல˙ *(Inspiration)*

2 தீமோத்தேயு 3:16ன்படி எப்படி வேதாகமம் வந்தது என்றில்லாமல், வேதாகமம் எங்கிருந்து வந்தது என்பதையே கூறுகிறது. வேத வசனங்கள் தேவனால் அருளப்பட்டவைகள்.

வேதாகமம் நமக்கு எப்படி வந்தது என்று அறிந்துகொள்வதற்கு, நாம் 2 பேதுரு 1:21ஐ திருப்பிப் பார்க்கும்போது, “தேவனுடைய வார்த்தைகளெல்லாம், தேவ ஆவியினால் பரிசுத்த மனிதர்கள் மூலமாக ஏவப்பட்டு பேசியவை” என்பதை நாம் அறிந்துகொள்ள முடியும்.

“பரிசுத்த ஆவியினால் ஏவப்படுதல்” என்ற வார்த்தையின் அர்த்தம் என்னவெனில் “தேவன்-மூச்சுவிடுதல்” என்பதாகும் ( 2தீமோ.3:16-17, 2 பேது.1:21, 2 சாமு.23:2).

பரிசுத்த ஆவியினால் ஏவப்பட்டு வெளிப்படுத்தப்பட்ட தேவ வசனங்களை எழுதுவது என்பது தவறு ஏதும் ஏற்படுத்தாமல் எழுதுவதாகும் (2 பேதுரு 1:21).

## வேத வசனங்கள் பிழையற்றது *(The Inerrancy of Scripture)*

வேதாகம வார்த்தைகளை தவறில்லாமல் விளக்குவதற்காக சில வேளைகளில் இரண்டு வார்த்தைகள் பயன்படுத்தப்படுகிறது: **அவை முழுவதுமாக மற்றும் வாய்வழியாக சொல்லப்பட்டது** என்பதாகும். ‘முழுவதுமாக’ என்ற வார்த்தை லத்தீன் வார்த்தையான ‘பிளீனஸ்” (Plenus) என்ற வார்த்தையிலிருந்து வந்ததாகும். இதனுடைய அர்த்தம் ‘முழு’ என்பதாகும். எனவே இந்த அர்த்தத்தின் அடிப்படையிலே, தேவனுடைய வசனங்கள் அனைத்தும், அதாவது ஒவ்வொரு பகுதியும் தேவன் தந்தவையே என்ற உண்மையை வெளிப்படுத்துவதாய் இருக்கிறது. ‘வாய்வழியாக’(Verbal) என்ற வார்த்தை லத்தீன் வார்த்தையான ‘வெர்பம்’(Verbum) என்ற வார்த்தையிலிருந்து வந்து ‘வார்த்தை’ என்ற அர்த்தத்தை கொடுக்கிறது. ஆகவே வேத வசனத்திலுள்ள ஒவ்வொரு வார்த்தையும் தேவன் கொடுத்தது என்பதை தெளிவாக நமக்கு வெளிப்படுத்துகிறது. இவ்விரண்டு வார்த்தைகளின் அடிப்படையில் வேதாகமத்தில் உள்ள அனைத்து பகுதிகளும் (கோட்பாடு, வரலாறு, புவிஅமைப்பு, நாள்கள் மற்றும் பெயர்கள்)மற்றும் ஒவ்வொரு தனித்தனி வார்த்தைகளும் தேவனால் கொடுக்கப்பட்டது என்பதாகும்.

**வேத வசனங்கள் பிழையற்றவை என்பதற்கான வேதாகம மற்றும் காரண அறிவு சார்ந்த உறுதிகள்:**

1.வேதவாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும், எந்த நற்கிரியையுஞ் செய்யத் தகுதியுள்ளவனாகவும் இருக்கும்படியாக,…. ( 2 தீமோ.3:16)

2. தேவனுடைய வார்த்தை சத்தியம் (யோவான் 17:17, சங்கீதம் 119:160)

3. தேவன் பொய்யுரைக்கிறவரல்ல (தீத்து 1:2)

எனவே தேவனுடைய வார்த்தைகள் பிழையற்றவை.

## வேதவசனத்தின் அதிகாரம் *(THE AUTHORITY OF SCRIPTURE)*

வேதத்தில் எழுதப்பட்ட வார்த்தைகளை, கர்த்தராகிய இயேசுவும் கூட சத்தியம் என்று அடையாளம் கண்டுகொண்டிருக்கிறார். பிரதான ஆசாரியரும், பெரியவருமான அவருடைய ஜெபத்தில்,“ உம்முடைய சத்தியத்தினால் அவர்களை பரிசுத்தப்படுத்தும்: உம்முடைய வார்த்தையே சத்தியம்”. பழைய ஏற்பாடு முழுவதிலும், தொடர்ச்சியாக பரிசுத்த ஆவியானவர், வெளிப்படுத்தப்பட்ட தேவனுடைய வார்த்தையே சத்தியம் என்று அறிவிக்கிறது மிகவும் பொருத்தமானதாக இருக்கிறது. உதாரணமாக சங்கீதம் 119:142ல், “உம்முடைய கட்டளையே சத்தியம்”. வேத வசனங்களைத் தவிர வேறெந்த மூலாதாரமும் மேற்சொல்லப்பட்ட வசனத்திற்கு ஈடாக முடியாது என்பதை நாம் விளங்கிக்கொள்ள முடியும். இந்த மூலாதாரம் மட்டுமே, பரிசுத்த வசனங்கள் மட்டுமே ஒரு விசுவாசியினுடைய தரமான சத்தியமாக இருக்க முடியும்.

புதிய ஏற்பாட்டில், இயேசு கிறிஸ்துவும் அவருடைய சீஷர்களும் எழுதப்பட்ட தேவனுடைய வார்த்தையை மட்டுமே, இறுதியான அதிகாரம் கொண்டது என்பதை தெளிவுபடுத்தியிருக்கிறார்கள்.

வேத வசனங்கள் மிகவும் கவனத்தில் கொள்ளப்படவேண்டும். ஏனெனில் வேத வசனங்களில் உள்ள ஒவ்வொரு கட்டளைகளும் மிகவும் முக்கியமானதாகக் கருதப்பட்டு அதற்கு ஒரு முக்கியமான இடத்தையும், அதிகாரத்தையும் கொடுக்கிற வண்ணமாக “கர்த்தர் சொல்லுகிறதாவது” என்ற வார்த்தைகள் தொடர்ந்து வேதாகமத்தை எழுதின ஆசிரியர்களால் எடுத்து கையாளப்பட்டிருக்கிறது.

“கர்த்தர் சொல்லுகிறதாவது” என்ற சொற்கள் சுமாராக 3000 தடவைளுக்கும் மேலாக வேதாகமத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளது இதிலிருந்து இந்த வார்த்தைகளைத் தொடர்ந்து வருகிற அனைத்து வசனங்களும் தேவன் பேசியவைகள் என்பதை நமக்கு வரையறை செய்கிறது.

## ஒளியூட்டுதல் *(The Illumination of Scripture)*

ஒளியூட்டுதல் என்பது, “எழுதப்பட்ட தேவனுடைய வார்த்தைகளை தேவனோடு சரியான உறவில் வாழ்ந்துகொண்டிருக்கிற யாவருக்கும் எளிதாக புரிந்துகொள்வதற்கு பரிசுத்த ஆவியானவர் கொடுக்கிற ஒரு ஊழியம் ஆகும்”.

வெளிப்படுத்தல்கள் கொடுக்கப்பட்டவைகளை புரிந்துகொள்ளுவதற்கான தெய்வீக திறமைதான் ஒளியூட்டுதல் (1 பேதுரு 1:10-12, லூக்கா 24:32, 45) ஆகும்.

தேவ மகிமையிலிருந்து பாவம் செய்து விழுந்துபோன மனிதனுக்கு தேவனையும், தேவனுடைய வார்த்தையையும் புரிந்துகொள்ள முடியாமல் போனதால், வேதவசனங்களை விளக்கிச் சொல்வதற்கு பரிசுத்த ஆவியானவரின் உதவி நமக்கு அவசியமாகிறது ( கொரி.2:14).

## வேதத்தில் உள்ள எழுது பொருட்கள்

நமது வேதத்தில் காணும் எழுத்துக்கள் பதிக்கப்பட்ட பொருட்கள்

1. **களிமண் (CLAY)**

எசே. 4:1,“மனுபுத்திரனே, நீ ஒரு செங்கலை எடுத்து, அதை உன்முன் வைத்து,அதின்மேல் எருசலேம் நகரத்தை வரைந்து”

2. **கல் (STONE) நியாயப்பிரமாணங்கள் கற்பலகையின் மீது எழுதப்பட்டது**

யாத். 24:12,31:18 “நான் உனக்குக் கற்பலகைகளையும், நீ அவர்களுக்கு உபதேசிப்பதற்கு, நான் எழுதின நியாயப்பிரமாணத்தையும் கற்பனைகளையும் கொடுப்பேன் என்றார்”. யோசுவா 8:32 “இஸ்ரவேல் புத்திரருக்கு முன்பாக மோசே எழுதியிருந்த நியாயப்பிரமாணத்தை அவன் அங்கே கற்களில் பேர்த்தெழுதினான்”.

3. **பாப்பிரஸ் (PAPYRUS)**

2 யோவான். 1:2 "காகிதத்தினாலும், மையினாலும் அவைகளை எழுத எனக்கு மனதில்லை". வெளி. 5:1 "ஒரு புத்தகத்தைச் சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கிறவருடைய வலதுகரத்திலே கண்டேன்".

**4. கன்றுக்குட்டியின் தோல் (VALCUM – CALF SKIN) ஆட்டுக்குட்டியின்தோல் (PARCHMENT)**

2 தீமோ.4:13 "புத்தகங்களையும், விசேஷமாய்த் தோற்சுருள்களையும் நீ வருகிறபோது எடுத்துக்கொண்டுவா".

5. உலோகம் **(METAL)**

யாத்.28:36 "பசும்பொன்னினால் ஒரு பட்டத்தைப் பண்ணி, கர்த்தருக்குப் பரிசுத்தம் என்று அதிலே முத்திரை வெட்டாக வெட்டி".

6. கோடெக்ஸ் **(CODEX)**

தனித்தனியாக இருந்த பாப்பிரஸுக்களையும் ஒன்றாக ஒரு புத்தகம்போல கட்டாக ஏற்படுத்தியுள்ளதை கோடெக்ஸ் என்று அழைத்தார்கள்.

7. எழுத்தாணி (எரேமியா 8:8)

**கேள்விகள்:**

1. நாம் புரிந்துகொள்வதற்காக வேதாகமம் எவ்விதங்களாக பிரிக்கப்பட்டிருக்கிறது என்பதனைக் கூறுக?
2. தேவன் தம்மை எவ்விதங்களிலெல்லாம் வெளிப்படுத்தியுள்ளார் என்பதனைக் கூறுக?
3. வேதவசனங்கள் பிழையற்றவை என்பதற்கான வேதாகம மற்றும் காரண அறிவு சார்ந்த உறுதிகளைப் பற்றி சற்று விளக்கமாக கூறுக.
4. வேத வசனத்திலே காணப்படுகிற அதிகாரங்கள் பற்றியும், வேதாகமம் எழுதப்படுவதற்கு உபயோகமாயிருந்த எழுதுபொருட்கள் என்னென்ன என்பது பற்றியும் கூறுக?